
கந்தகத் திணை

# குழந்தைப் பாக்கள்

மின் – நூல்

02











உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்கு இணையம் வழித் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)

**சிவகாசி - 626 189**

மற்றும்

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**சிவகாசி - 626 124**

## இணைந்து உருவாக்கும்

## மின்-நூல் (E-book)

# கந்தகத் திணை

## (புதியதோர் உலகம் செய்வோம்)

(2015 - 2016)

## குழந்தைப் பாக்கள் - 2

தமிழ்த்துறை மாணவர் குழாம்

# கவிதைப் பூம்பொழில்

உலக உயிரினம் முழுமையும் வேறுபாடற்று உச்சரிக்கும் ஒரே உயிர் மந்திரமான அம்மா உலக உயிர்களின் உறவை நெறிப்படுத்திக் கட்டி இழுத்துச் செல்லும் அன்பு தமிழர்களின் சமையல் பண்பாட்டை பறைசாற்றும் அஞ்சறைப்பெட்டி எல்லா இடத்திலும் உறவுகளைப் போல ஓடியாடி வலம்வரும் எறும்பு மனித உணர்வுகளைப் பறைசாற்றும் கண்ணீர் தமிழர் கலைகளின் உயர்வைச் சொல்லும் கோபுரம் சுற்றுச்சூழலுக்கும் மனிதருக்கும் தீமை தராத மிதிவண்டி இயற்கை மருந்தாய் அழகுநிறை அடர் பசுமையாய் உயிர் பெற்று நிற்கும் சோற்றுக்கற்றாழை என கந்தகத்திணையின் கவிதைப் பூம்பொழில் எழில் பெற்று நிற்கின்றது. பூம்பொழில் இயற்கை எழில் நிறைந்து மனதை மகிழ்விக்கும். கந்தகத்திணையின் கவிதைப் பூம்பொழிலும் அறிவும் அழகும் நிறைந்து குழந்தைகளை மகிழ்விக்கும். 'பாப்பா பாக்கள்' மின்–நூலாய் ஆக்கம் பெற வழிகோலிய கல்லூரி நிர்வாகத்தாருக்கு இதயம் கனிந்த நன்றி.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன் கோடீஸ்வரன்** அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்** அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ. அசோக்** அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும் **உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் ( Graphic ) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார் (III MCA) அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!

முனைவர் **ந. அருள்மொழி,**
ஒருங்கிணைப்பாளர், கந்தகத்திணை

# பொருளடக்கம்



| வ. எண். | படைப்பு | படைப்பாளர்பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 01 | அம்மா | ப. கணேஷ்வரி | 01 |
| 02 | அன்பு செய்ய விரும்பு | ர. நாகலட்சுமி | 02 |
| 03 | அஞ்சறைப் பெட்டியில் மருந்து | கு. புவனேஸ்வரி | 03 |
| 04 | எறும்பு | சு. சண்முகப்பிரியா | 04 |
| 05 | கண்ணீர் | த. ஆனந்தஜோதி | 05 |
| 06 | கோபுரம் | சு. சண்முகப்பிரியா | 06 |
| 07 | மிதிவண்டி | பா. நித்யா | 07 |
| 08 | சோற்றுக்கற்றாழை | கு. புவனேஸ்வரி | 08 |

# அம்மா

அ ‘அ‘ வைப் போன்று முதன்மையே!
அன்பிற்கவள் அன்னையே!

ஆ ஆடிப்பாடிக் கொஞ்சியே
ஆசை முத்தம் தருபவள்!

இ இங்கும் அங்கும் ஓடியே
இனிய சோறு ஊட்டுவாள்!

ஈ ஈசனையும் காட்டியே
ஈகை கற்றுத் தருபவள்!

உ உண்மை பேசச் சொல்லியே
உலகைச் சுற்றிக் காட்டுவாள்!

ஊ ஊஞ்சலிலே ஆட்டியே
ஊர்வலமும் நடத்துவாள்!



எ எட்டு வைத்து நடக்கவே-எனை
அள்ளி அணைத்துத் தூக்குவாள்!

ஏ ஏட்டில் எழுதும் போதிலே
ஏணி போல உதவுவாள்!

ஐ ஐயோ! என்று அலறினால்
ஐயமும் தணிவிப்பாள்!

ஒ ஒற்றைச் சடையில் பூவையே
ஒய்யாரமாய் அணிவிப்பாள்!

ஓ ஓதல் கற்கச் செல்லவே
ஓடமாக இருப்பவள்!

ஔ ஔவை பாடல் பாடியே
ஔவியம் (பொறாமை) தனைப் போக்குவாள்!

ப. கணேஷ்வரி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்.

# அன்பு செய்ய விரும்பு



அன்பு செய்ய விரும்பு தம்பி - நீயும்
அன்பு செய்ய விரும்பு தம்பி!
பொறாமை நீக்கும் தம்பி - அன்பு
பொறுமை தரும் தம்பி!
தீமை நீக்கும் தம்பி - அன்பு
நன்மை புரியும் தம்பி!
கோபம் நீக்கும் தம்பி - அன்பு
களிப்பைக் கொடுக்கும் தம்பி!
ஒற்றுமை கற்றுத் தரும் தம்பி - அன்பு
ஒழுக்கமும் கற்றுத்தரும் தம்பி!
அன்பைக் கடனாய்க் கொடு தம்பி - உனை
அண்டம் போற்றும் தம்பி!

ர. நாகலட்சுமி,
முதுகலைத் தமிழ் முதலாம் ஆண்டு.


# அஞ்சறைப் பெட்டியில் மருந்து



வா மகளே! வா மகளே!
மணக்க மணக்கச் சமைக்க வா!
அஞ்சறைப் பெட்டி எடுத்து வா
அன்போடு சமைக்க வா!
கொத்தமல்லி கொண்டு வா
பித்தம் போக்கும் அறிந்து வா!
சீரகம் எடுத்துச் சீக்கிரம் வா
வயிற்றுச் சூடு தணிக்கும் தாவி வா!
கருமிளகு கொண்டு வா
கடுஞ்சளியும் தொலையும் துணிந்து வா!
பெருங்காயம் எடுத்து வா
பெருவளியை ஓட்டும் ஓடி வா!
மஞ்சள் கிழங்கு எடுத்து வா
நெஞ்சுச் சளியும் நீக்கும் நிமிர்ந்து வா!
வா மகளே! வா மகளே!
மணக்க மணக்கச் சமைக்க வா!

கு. புவனேஸ்வரி
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

# எறும்பு



எறும்பு பார்! எறும்பு பார்!
குறும்பு செய்யும் எறும்பு பார்!
இனிப்பு உள்ள இடத்தையே
இணைந்து தேடும் எறும்பு பார்!
மாரி வரும் முன்பே உணவை
வாரி வரும் எறும்பு பார்!
காயம் பட்ட எறும்பையும்
காத்து நிற்கும் எறும்பு பார்!
ஐம்பது மடங்கு எடையையும்
அசராமல் சுமந்திடும் எறும்பு பார்!
சுற்றிச் சுற்றி வந்தாலும்
சுற்றத்தோடு சேரும் எறும்பு பார்!
ஆயிரம் பேரோடு சென்றாலும்
அமைதியாய்ச் செல்லும் எறும்பு பார்!
உறக்கமில்லா உழைப்போடு
உற்சாகமாய் வரும் எறும்பு பார்!

சு. சண்முகப்பிரியா,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

# கண்ணீர்

ஆடிப் பாடிப் பார்க்கலாம்
அழகுக் கண்ணைச் சிமிட்டலாம்!
இன்ப துன்பம் வந்திடலாம்
இயல்பாய்க் கண்ணீர் வடிந்திடலாம்!
கண்கள் சுமக்கும் கண்ணீரின்
கதையை நாமும் பேசலாம்!
'லாக்ரிமல்' கண்ணீர் சுரந்திடுமாம்
கவலை பறந்து ஓடிடுமாம்!
மளமளன்னு ஓடும் கண்ணீர் தான்
'மாங்கனீசை' வெளியேற்றுமாம்!
மனச் சோர்வும் போக்குமாம்
முத்து முத்துக் கண்ணீரும்
முழுதும் ஆயுள் கூட்டுமாம்!
கண்ணீர் வடித்திடலாம்
கலகலன்னு சிரித்திடலாம்!






( குறிப்பு: லாக்ரிமல் - கண்ணீர் சுரக்கும் சுரப்பி )

த. ஆனந்தஜோதி,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.


# கோபுரம்



கோபுரமாம் கோபுரம்
ஓங்கி உயர்ந்த கோபுரம்!
திருவில்லிபுத்தூர் கோபுரம் - அது
திருத்தமான கோபுரம்!
வண்ணச் சுதைக் கோபுரம் - அது
விண்ணைத் தொடும் கோபுரம்!
அரசு முத்திரைக் கோபுரம் - அது
ஆண்டாள் கோயில் கோபுரம்!
சமயம் சாராத கோபுரம் - எச்
சமயத்திலும் சாயாத கோபுரம்!
நல்மன்னர் கட்டிய கோபுரம்!
நளினமான கோபுரம்!
நேரம் கிடைக்கும் போதெல்லாம்
நினைத்து நினைத்துப் பார்க்கலாம்
நீண்ட நெடு கோபுரம் நிலையான கோபுரம்!

சு. சண்முகப்பிரியா,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

# மிதிவண்டி




மிதிவண்டி! மிதிவண்டி!
சொகுசான மிதிவண்டி!
சீமையிலே செய்த வண்டி
சிங்காரமான வண்டி!
டன்லப் செய்த வண்டி!
டக் அடித்து ஏறும் வண்டி!
இரும்பாலே செய்த வண்டி
எங்கெங்கும் ஓடும் வண்டி,
உடற்பயிற்சிக்கு ஏற்ற வண்டி!
உடலினை உறுதி செய்யும் வண்டி!
மாசுபாடு செய்யாத வண்டி!
மந்திரமான இயந்திர வண்டி!
கருமையான சாலையில்
உருண்டு ஓடும் அழகு வண்டி!

பா. நித்யா,
ஆய்வியல் நிறைஞர் (தமிழ்).

# சோற்றுக் கற்றாழை

கள்ளிக்காடு போகலாம்
கற்றாழையைப் பார்க்கலாம்!



கொத்துக் கொத்தாய்க் கற்றாழை
குளிர்ச்சி மிகுந்த கற்றாழை!
கொய்து நாமும் செல்லலாம்
நீர்பெய்தும் வளர்க்கலாம்

தொட்டியிலும் வளர்க்கலாம்
தோட்டத்திலும் வளர்க்கலாம்
முள்ளோடு முளைக்குமாம்
வறட்சியிலும் வளருமாம்!

பச்சைத் தோலைச் சீவலாம்
கற்றாழைச் சோற்றைக் காணலாம்!
கசந்து கிடக்கும் சோற்றையும்
கழுவி நாமும் உண்ணலாம்!



மூலச்சூடு முறிக்குமாம்
முடியும் நன்றாய் வளர்க்குமாம்
கண்களையும் கவருமாம்
கண்ணேறும் கழிக்குமாம்!

கு. புவனேஸ்வரி,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

# நன்றி

